பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 08 2026 FRIDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் 80வது சுதந்திர தினத்தை ஒட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி இன்றிரவு 7 மணிக்கு நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி தில்லி செங்கோட்டையில் நாளை தேசியக்கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தின உரையாற்றவுள்ளார்.
- சுதந்திர தினத்தை ஒட்டி, காவல்துறையினருக்கான குடியரசுத்தலைவரின் பதக்கம் மற்றும் சிறந்த சேவைக்கான பதக்கங்கள் இந்த ஆண்டு ஆயிரத்து 57 பேருக்கு வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- முன்னாள் அக்னிவீரர்களுக்கு, தீயணைப்பு மற்றும் சிறைத்துறை பணியிடங்களில் 20 சதவீத இடஒதுக்கீடு வழங்க தில்லி அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

நாட்டின் 80-வது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு ஏழு மணிக்கு நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.

குடியரசுத்தலைவரின் உரை ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் ஒலிபரப்பாகிறது.

அதைத் தொடர்ந்து குடியரசுத்தலைவரின் உரை, மாநில மொழிகளில் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் பிராந்திய அலைவரிசைகளில் ஒலிபரப்பாக உள்ளது.

அத்துடன் குடியரசுத்தலைவரின் உரை ஆகாஷ்வாணியின் பிராந்திய அலைவரிசைகளில் இரவு மணி 9.30க்கு மாநில மொழிகளில் ஒலிபரப்பாகும்.

>>>>>><<<<<<

நாட்டின் 80வது சுதந்திர தினத்தை ஒட்டி, தில்லி செங்கோட்டையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை தேசியக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றவுள்ளார்.

இந்திய விமானப்படையின் MI - 17 ஹெலிகாப்டர்கள் மூலம் மலர்தூவி சுதந்திர தின கொண்டாட்டங்கள் தொடங்குகிறது.

21 குண்டுகள் முழங்க தேசியக்கொடி ஏற்றப்படவுள்ளது.

சுதந்திரப் போராட்டத்தில் மக்களுக்கு சுதந்திர உணர்வை ஊட்டிய வந்தேமாதரம் தேசியப் பாடலின் 150-வது ஆண்டும் இந்த சுதந்திர தினத்தில் நினைவுகூரப்படுகிறது.

மக்களின் ஆற்றல், எதிர்பார்ப்புகள் மற்றும் இளைஞர்களின் பங்களிப்போடு வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உத்வேகத்தையும் இந்த பாடல் அளிக்கிறது.

இந்த ஆண்டு சுதந்திர தின விழாவில் முதலில் தேசியப்பாடலான வந்தேமாதரம் பாடப்பட்ட பின்னர், தேசியக்கீதமும் பாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தை ஒட்டி, தலைநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் விழா நடைபெறும் பகுதியில் பொருத்தப்பட்டுள்ளன.

இதனிடையே, தமிழகத்தில் சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் திரு. விஜய் தேசியக்கொடியை நாளை ஏற்றி வைக்கிறார்.

இந்நாளையொட்டி, சென்னை மாநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் ஐந்தடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட – சுரேகா 37 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தில்லி செங்கோட்டையில் நடைபெறும், சுதந்திர தின விழா கொண்டாட்டங்களில் தில்லி மற்றும் புறநகர் பகுதியைச் சேர்ந்த  பிரதமரின் விஷ்வகர்மா திட்டப் பயனாளிகள் 100 பேர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக, மத்திய சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், இந்த அழைப்பாளர்களுக்கு சுதந்திர தின விழா சிறப்பு மலர் வழங்கப்படும் என்றும், பின்னர் அவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் விஷ்வகர்மா திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் தையல் கலைஞர்கள், தச்சர்கள், பொற்கொல்லர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளும் இந்த விழாவில், பங்குபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாரம்பரிய கைவினைக் கலைஞர்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த மரியாதை செலுத்தப்படுவதாக அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சுதந்திர தினத்தை ஒட்டி, காவல்துறையினருக்கான குடியரசுத்தலைவரின் பதக்கம் மற்றும் சிறந்த சேவைக்கான பதக்கங்கள் இந்த ஆண்டு ஆயிரத்து 57 பேருக்கு வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

தலைசிறந்த சேவைக்கான குடியரசுத் தலைவரின் பதக்கம், 92 பேருக்கு வழங்கப்படவுள்ளன.

இதில் மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் 21 பேருக்கு இந்த பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

சிறப்பாக சேவையாற்றிய காவல்துறையினர், தீயணைப்புத்துறையினர் மற்றும் ஊர்க்காவல் படையினருக்கான பதக்கங்கள் 664 பேருக்கு வழங்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

வீர தீர செயலுக்கான பதக்கம் 301 பேருக்கு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், தமிழகத்திலிருந்து, குடியரசுத்தலைவரின் பதக்கங்கள் 3 பேருக்கும் சிறந்த சேவைக்கான பதக்கங்கள் 17 பேருக்கும் வழங்கப்படவுள்ளன.

>>>>>><<<<<<

போதைப்பொருள் கடத்தலில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான Virender Singh Basoya-வை ஐக்கிய அரபு அமிரேட்டிலிருந்து இந்தியா கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மத்திய அரசின் இந்த நடவடிக்கை, போதைப்பொருளுக்கு எதிரான உறுதியான கொள்கையை வெளிப்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும், அவர்கள் பதுங்கியிருக்கும் இடங்கள் மற்றும் ஒட்டுமொத்த கட்டமைப்பை முறியடிப்பதற்கான நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்துவோர் மீது எவ்வித ஈவு இரக்கமும் இன்றி கடுமையான நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் உள்ள போதைப்பொருள் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்புகள், கடத்தல்காரர்களை சட்டத்தின் முன் நிறுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தேசப்பிரிவினை துயரங்களின் நினைவு தினத்தை ஒட்டி தலைவர்கள் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தேசப் பிரிவினையால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைப் பயணத்தின் வலியை இந்நாள் நினைவூட்டுவதாக கூறியுள்ளார்.

நல்லிணக்கத்தையும், சகோரதரத்துவத்தையும் பேணிக்காத்து, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டை இந்த நாள் மேலும் வலுப்படுத்துவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தப் போராட்டத்தில் மன உறுதியுடன் செயல்பட்டு, உயிர்த் தியாகம் செய்தவர்களை இந்நாளில் நினைவுகூருவோம் என்று கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், தேசப்பிரிவினை காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் நாட்டுக்காக தங்கள் இன்னுயிரை ஈந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் தங்கள் வீடுகள், உடமைகள் மற்றும் தங்களுக்கு அன்பானவர்களை இழந்து, பெரும் இன்னலுக்கு ஆளானதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த துயர நினைவுகளை இளைஞர்கள் மனதில் கொண்டு, நாட்டின் வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணித்து செயலாற்ற வேண்டும் என்று திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டுக்காக மக்கள் அனுபவித்த செல்லொண்ணா துயரத்தையும், வலியையும் இந்நாளில் நினைவுகூர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

தியாகிகளின் உறுதிப்பாட்டையும் தியாகத்தையும் போற்றுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேச ஒற்றுமை, அமைதி, நல்லிணக்கம், மனிதநேயம் ஆகியவற்றை இந்த நாள் உணர்த்துவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

முன்னாள் அக்னிவீரர்களுக்கு, தீயணைப்பு மற்றும் சிறைத்துறை பணியிடங்களில் 20 சதவீத இடஒதுக்கீடு வழங்க தில்லி அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

உள்துறை அமைச்சகத்தின் உத்தரவின் படி, முன்னாள் அக்னிவீரர்களுக்கு வயது வரம்பிலும் தளர்வு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரில் பாரம்பரிய சுற்றுலா தலங்களை மேம்படுத்துவதற்கு 18 கோடியே 60 லட்சம் ரூபாயை யூனியன் பிரதேச அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

Sampa மாவட்டத்தில் உள்ள Utterbehani சுற்றுலா தலத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை சீரமைக்கவும், கத்துவா மாவட்டத்தில் உள்ள Basohli கோட்டையை புனரமைத்து அழகுபடுத்தவும், அனுராக் மாவட்டத்தில் உள்ள நீர்வீழ்ச்சியை சீரமைக்கவும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

அஹமதாபாதில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

அஸ்தானா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Zeel Desai - தென்கொரியாவின் Heerae இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 3-6, 6-3, 10-8 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் Arina – Anna Sedysheva இணையை வென்றது.

>>>>>><<<<<<

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் திண்டுக்கல் – சேலம் அணியையும், சேப்பாக் – மதுரை அணியையும் எதிர்கொள்கின்றனன.

>>>>>>END<<<<<<